**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 585** **நாள்: 18.10.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பெய்த கனமழையின் காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங்பேடி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று இயல்பைவிட அதிக அளவில் கனமழை பெய்தது. இதனால் ஒரு சில இடங்களில் தேங்கிய மழை நீரை வெளியேற்றும் பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களால் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட தாழ்வான பகுதிகள் மற்றும் சுரங்க பாதை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வெளியேற்றம் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட உணவு ஆகியவற்றை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங்பேடி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.10.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இக்கட்டுப்பாட்டு மையத்தில் பெறப்படும் பருவமழை தொடர்பான புகார்கள், திரைகளில் நேரலையாக கண்காணிக்கப்படும் கால்வாய்களின் நீர் அளவு மற்றும் சுரங்கப்பாதைகளின் தற்போதைய நிலை ஆகியவற்றை நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், சிந்தாதிரிப்பேட்டை அய்யா முதலி தெருவில் உள்ள மையப்படுத்தப்பட்ட சமையல் கூடத்தினை பார்வையிட்டு, அங்கு பொதுமக்களுக்கு வழங்க தயாரிக்கப்பட்டிருந்த உணவின் தரம் குறித்து ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, கணேசபுரம் சுரங்க பாதை மற்றும் திரு.வி.க. நகர் மண்டலத்திற்கு உட்பட்ட அங்காளம்மன் கோயில் தெருவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் அகற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அனைத்து சுரங்கப்பாதைகளும் அமைந்துள்ள பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கிய உடனே மோட்டார் பம்புகளின் மூலம் தேங்கும் நீரை அகற்ற மோட்டார் பம்பு இயக்குபவர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டுமென அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி .எஸ். சமீரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு. தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி சித்ரா விஜயன், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**